# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம்

---

*(1995 யூன் மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

*1995, யூன் மாதம் 30 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 | தபாற் செலவு : ரூபா 2.00

# 1995 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவிடு (திருத்தச்) சட்டம்.

[1995, ஜூன் மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 26/95

1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கப் பாதுகாப்பு அறவிட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவிடு (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கப் பாதுகாப்பு அறவிட்டுச் சட்டத்தின் 4ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஈ) 1994 சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1995 யூலை 1 ஆம் திகதிக்கு முன்னரான ஒவ்வொரு காலாண்டிற்கும் —

(i) அக்காலாண்டின் முதலாவது மாதத்திற்கு அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் மூன்றரைச் சதவீதத்துக்குச் சமனான தொகையொன்றை அக்காலாண்டின் இரண்டாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ;

(ii) அக்காலாண்டின் இரண்டாம் மாதத்திற்கு அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் மூன்றரைச் சதவீதத்திற்குச் சமனான தொகையொன்றை அக்காலாண்டின் மூன்றாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ; அத்துடன்

(iii) அக்காலாண்டிற்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படத்பாலதான அறவிட்டின் தொகை, இப்பந்தியின் (i) ஆம் (ii) ஆம் உட்பந்திகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க அவரால் செலுத்தப்படும் தொகைகளின் கூட்டுமொத்தத்தால் குறைக்கப்பட்டு, அக்காலாண்டின் முடிவை உடனடுத்த மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்.

(உ) 1995, யூலை 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 1996 சனவரி 1 ஆம் திகதிக்கு முன்னரான ஒவ்வொரு காலாண்டிற்கும் —

(i) அக்காலாண்டின் முதலாவது மாதத்திற்கு அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் நாலரைச் சதவீதத்திற்குச் சமனான தொகையொன்றை அக்காலாண்டின் இரண்டாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ;

(ii) அக்காலாண்டின் இரண்டாம் மாதத்திற்கு அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் நாலரைச் சதவீதத்திற்குச் சமனான தொகையொன்றை அக்காலாண்டின் மூன்றும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;

(iii) அக்காலாண்டிற்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான அறவிட்டின் தொகை, இப்பந்தியின் (i) ஆம், (ii) ஆம் உட்பந்திகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரால் செலுத்தப்படும் தொகைகளின் கூட்டுமொத்தத்தால் குறைக்கப்பட்டு, அக்காலாண்டின் முடிவை உடனடுத்த மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்.".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையை மாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :—

"அட்டவணை (பிரிவு 3)

| காலாண்டு | வீதம் |
|---|---|
| 1992, சனவரி 1 ஆம் திகதியன்று தொடங்கும் காலாண்டுக்கு | 1 சதவீதம் |
| 1992, ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் காலாண்டுக்கு | 2.3 சதவீதம் |
| 1992, யூலை 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 1994, சனவரி 1 ஆம் திகதிக்கு முன்னரான காலாண்டு எதற்கும் | 3 சதவீதம் |
| 1994, சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 1995, யூலை 1 ஆம் திகதிக்கு முன்னரான காலாண்டு எதற்கும் | 3.5 சதவீதம் |
| 1995, யூலை 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 1996 சனவரி 1 ஆம் திகதிக்கு முன்னரான காலாண்டு எதற்கும் | 4.5 சதவீதம்". |

சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

---

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*